[1979 அக்டோபர் 29

மாண்புமிகு திரு. எஸ். டி.சோமசுந்தரம் : தலைவரவர்களே சில ரெவின்யூ பிர்க்காக்களில் 50 கிராமங்கள் இருக்கின்றன. சிலவற்றில் 8 கிராமங்கள் இருக்கின்றன. இன்னும் சிலவற்றில் 30 இருக்கின்றன. ஒரே சீராக இல்லை என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது. இன்றைக்கு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்த இடத்தில் சீராக இல்லை என்று குறிப்பாக நீங்கள் சொன்னால் சீராக்கு வதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். விளக்கம் சரியாக இருந்தால் சரியென்று ஏற்றுக் கொள்கிறேன். இல்லையென்றால் மறுத்துச் சொல்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் உப்பளத் தொழில்.

*வினா எண் 24—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த வட்டங்களில் உப்பளங்கள் உள்ளன ?

(ஆ) ஒவ்வொரு வட்டத்திலுமுள்ள உப்பளங்களின் பரப்பளவு எவ்வளவு ?

(இ) அரசுக்கு சொந்தமான உப்பளங்களிலிருந்து குத்தகை வருமானம் எவ்வளவு ?

(ஈ) உப்பளத் தொழில் மூலம் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு உள்ளன ?

(உ) வரி மூலம் அரசிற்கு ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி வட்டங்களில் மட்டுமே உப்பளங்கள் உள்ளன.

(ஆ) பட்டுக்கோட்டை வட்டத்தில் ஏக்கர் 526.16 செண்டு நிலமும், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் ஏக்கர் 35,012.22 செண்டு நிலமும் உப்பளங்களாக உள்ளன.

(இ) பட்டுக்கோட்டை வட்டத்தில் ரூ. 1,492-ம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் ரூ. 64,750-ம் வருமானம் கிடைக்கிறது.

(ஈ) பட்டுக்கோட்டை வட்டத்தில் 1,057 நபர்களுக்கும், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் 4,826 நபர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

1979 அக்டோபர் 29]

(உ) பட்டுக்கோட்டை வட்டத்தில் ரூ. 3,729-ம் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் ரூ. 1,61,874 வரி மூலம் (லோகல் செஸ், லோகல் செஸ் சர்சார்ஜ்) கிடைக்கிறது.

திரு. எம். ஆர். கோவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, உப்பு உற்பத்தி செய்வதற்கு அரசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா ? ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, உப்பு உற்பத்தி செய்வதற்காக அரசு நிலங்கள் கீழ்க்கண்ட விவரப்படி குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது:—

1. மேட்டூர் கெமிக்கல்ஸ்—3,500 ஏக்கர், 30 ஆண்டுகளுக்கு விடப்பட்டிருக்கிறது—1962-வது ஆண்டு முதல் விடப்பட்டிருக்கிறது.

2. விம்கோ—12,266 ஏக்கர், 40 ஆண்டுகளுக்கு விடப்பட்டிருக்கிறது—1963-வது ஆண்டு முதல் விடப்பட்டிருக்கிறது.

3. வேதாரண்யம் உப்புத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்திற்கு 236 ஏக்கர், 25 ஆண்டுகளுக்கு விடப்பட்டிருக்கிறது—1978 ஆம் ஆண்டு முதல் விடப்பட்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் விம்கோவுக்கு 12,266 ஏக்கர்களும், மேட்டூர் கெமிக்கல்சுக்கு 3,500 ஏக்கர்களும் குத்தகைக்கு விடப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த நிலத்தினை அரசே நேரடியாக எடுத்து அந்த உப்பளத்தை நடத்துவதற்கும் அதிலுள்ள தொழிலாளர்களை நேரடியாக எடுத்து, அவர்கள் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கப்படுவதற்கான முறையில் அரசு தகுந்த நடவடிக்கையைத் துரிதமாக எடுக்குமா, குத்தகையை ரத்து செய்யுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புவதோடு, குத்தகை எவ்வளவுக்கு விடப்பட்டிருக்கிறது, ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் அரசுக்கு வருகிறது என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் என்பதை முதலிலேயே தெரிவித்திருக்கிறேன். இவைகளெல்லாம் தனியார் துறையிலே விடப்பட்டிருந்தாலும், எல்லாவற்றையும் ஏற்று நடத்துவது என்பது இன்றைக்கு முடியாது என்பது உங்

களுக்குத் தெரியும். எடுத்துக் காட்டாகத்தான், அரசின் சார்பிலே இன்றைக்கு 3,954.92 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டு, உப்பு உற்பத்தி செய்ய தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறோம். அது விரிவடையும்போது அருகாமையில் இருப்பதையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக எடுக்க அரசு முயற்சி செய்யும்.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவரவர்களே, உப்பளங்களிலே பணியாற்றும் தொழிலாளர்கள் நகரங்களிலேயிருந்து வெகு தூரங்களுக்குச் சென்று பணியாற்றும் அவல நிலைமை இருப்பதை அரசு அறியுமா ? அந்தத் தொழிலாளர்கள் பணியாற்றும் பகுதிக்கு அருகிலேயே குடியிருக்கும் வகையில், அந்தப் பகுதிகளிலேயே நிலங்களை வாங்கி அளித்திட, முதலாளிகளிடத்திலே அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த அவல நிலை எந்தக் காலத்திலேயிருந்து இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்களா என்பது எனக்குத் தெரியாது. அது இன்றைக்கு ஏற்பட்ட அவல நிலை அல்ல. அதைப் பற்றி அரசு கவனித்து ஆவன செய்யும்.

[முற்பகல் 9.10]

Kalugumalai as Pilgrim Centre

* Q. No. 25 — Thiru S. GANESAN : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :

(a) whether any representations, requesting the Government to notify Kalugumalai in Tirunelveli district as a Pilgrim Centre has been received ; and

(b) if so, the action taken there on ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மற்றும் (ஆ) கழுகுமலை இப்பொழுது யாத்திரீகர்கள் தலமாகத்தான் பயன்படுத்தப்படுகிறது.

திரு. ரா. கு. பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தெய்வம் என்று கருதப்படுகின்ற முருகனுக்கு ஆறுபடை வீடுகளில் ஒன்றாக இருக்கின்ற கழுகுமலை (குறுக்கீடு) யாத்திரீகர்கள் ஸ்தலமாகத்தான் இருக்கிறது. இருந்த போதிலும் அரசு அதை விரிவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் சுற்றுலா மையமாக அறிவிக்கின்ற எண்ணம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.